# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**

www.tsch.org.au
info@tsch.org.au


**பேச்சுப்போட்டி 2021** **ஆண்டு மூன்று**

அனைவருக்கும் வணக்கம்

## அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

நம் தாயும் தந்தையும் நாம் முதலில் காண்கின்ற தெய்வங்கள். நாம் குடியிருந்த கோயில் நம் தாய் தந்தையர். அவர்களையே பிறந்தவுடன் காண்கிறோம்.

அப்படி முதன் முதலில் காண்கின்ற நம் அம்மா அப்பாவை தெய்வமாக மதித்து வணங்குதல் பல்லாண்டு காலம் எமது கலாச்சாரத்தில் நிலவி வரும் பண்பாடாகும்.

''தாயிற் சிறந்த கோயிலுமில்லை, தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'' இதுவும் முதுமொழி.

அன்னையும் பிதாவும் நம் இரு கண்கள் போன்றவர்கள். அவர்கள் இன்றி நாம் மனிதராக இந்த மண்ணில் பிறந்திருக்க முடியாது.

தாயே எமக்கு மூலாதாரம். தந்தையே ஜீவாதாரம். அப்படிப்பட்ட தாயின் அன்பு, உலகின் எந்த அன்புக்கும் ஈடாகாது. அதனால் தான் அம்மாவை முன்னுக்கு வைத்து மாதா, பிதா, குரு, தெய்வம் என்று போற்றுகிறோம்.

நன்றி
வணக்கம்